RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 260 | செப்டம்பர்.21 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் செப்.26 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு



சென்னை, செப்.21-

தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் வரும் 26ம் தேதி வரை ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும் (செப்.21), நாளை மறுதினமும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 23, 26ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.


சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தென்தமிழக கடலோரப் பகுதிகள், வடதமிழக கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 24ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும், இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம், திருவள்ளூர் மாவட்டம் ஜெயா பொறியியல் கல்லூரியில் தலா 7, சென்னை அம்பத்தூர், அயப்பாக்கம், கொரட்டூரில் தலா 6 செமீ திருவள்ளூர் மாவட்டம் ஆவடி, திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி, ஈரோடு மாவட்டம் நம்பியூரில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஏசிஎஸ் மருத்துவக் கல்லூரி, கரூர் மாவட்டம் தோமலை, சென்னை வில்லிவாக்கம், நுங்கம்பாக்கம், டிஜிபி அலுவலகம், புழல், மதுரவாயல், கொளத்தூர், அயனாவரம், மேடவாக்கம், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, சேலம் மாவட்டம் மேட்டூர், கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரம்மோற்சவ விழாவில் 60 டன் மலர்களால் அலங்காரம்: திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி தகவல்



திருமலை, செப்.21-

திருப்பதி ஏழுமலையான் கோயில் பிரம்மோற்சவ விழா பிரம்மாண்டமாக நடத்தப்பட உள்ளது. 9 நாட்கள் நடைபெற உள்ள இந்த விழாவுக்காக ரூ.3.5 கோடி செலவில் 60 டன் மலர்களால் அலங்காரம் செய்யப்பட உள்ளது. திருப்பதி ஏழுமலையானின் பிரம்மோற்சவ விழா வரும் 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, அக்டோபர் 2ம் தேதி வரை கோலாகலமாக நடைபெற உள்ளது. இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரிஅனில்குமார் சிங்கால் தலைமையில் திருமலையில் நேற்று நடந்தது.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிரம்மோற்சவ விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளன. ஆகம சாஸ்திர விதிகளின்படி கடந்த செவ்வாய்க்கிழமை கோயில் முழுவதும் சுத்தம் செய்யப்பட்டது. வாகனங்களின் மராமத்து பணிகள் நிறைவடைந்து உள்ளன. முதல்வர் சந்திரபாபு நாயுடு வரும் 24ம் தேதி பட்டு வஸ்திரங்களை காணிக்கையாக வழங்க உள்ளார். அன்று மாலை கொடியேற்றத்துடன் ஏழுமலையானின் பிரம்மோற்சவம் தொடங்குகிறது.

மறுநாள் 25ம் தேதி பக்தர்கள் தங்கும் பிஏசி 5 தொகுப்பு விடுதிகளை முதல்வர் திறந்து வைக்கிறார். சிவில் பொறியியல் பணிகளுக்காக ரூ.9.5 கோடியும், எலக்ட்ரிக் பணிகளுக்காக ரூ.5.5 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலர் அலங்காரத்துக்காக ரூ. 3.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 60 டன் மலர்களால் அலங்காரம் செய்யப்பட உள்ளது.

நேரடியாக திருமலைக்கு வரும் பக்தர்களுக்காக 3,500 தங்கும் அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. திருமலையில் 36 எல்.இ.டி தொலைக்காட்சிகள் மூலம் வாகன சேவையை காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கருட சேவையன்று தவிர, நாள் ஒன்றுக்கு 1.16 லட்சம் சிறப்பு தரிசன டிக்கெட்டுகள், மற்றும் 25 ஆயிரம் சர்வ தரிசன டிக்கெட்டுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

சாமானிய பக்தர்களுக்கு முன்னுரிமை வழங்க முடிவு செய்யப்பட்டு, விஐபி பிரேக் தரிசன முறை ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு தரிசனங்களும், ஆர்ஜித சேவை டிக்கெட்டுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. தினமும் 8 லட்சம் லட்டு பிரசாதங்கள் வழங்கப்பட உள்ளன. 20 உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கருட சேவையன்று மாட வீதிகளில் வாகன சேவையை காண திரண்டிருக்கும் பக்தர்களுக்கு 14 வகையான உணவுகளை விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தினமும் காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரை பக்தர்களுக்கு மாத்ரு ஸ்ரீ வெங்கமாம்பாள் அன்னதான சத்திரத்தில் இலவச அன்னதானம் வழங்கப்படும். திருமலை மற்றும் திருப்பதியில் வாகனங்கள் நிறுத்துமிட வசதி செய்யப்பட்டுள்ளது. தினமும் 1,900 தடவை திருமலைதிருப்பதி இடையே ஆந்திர அரசு பேருந்துகள் இயக்கப்படும். கருட சேவையான 28ம் தேதி 3,200 தடவைகள் பேருந்துகள் இயக்கப்படும்.

2,000 திருப்பதி தேவஸ்தான பாதுகாவலர்கள், 4,700 போலீஸார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். மேலும் 3,500 ஸ்ரீவாரி சேவகர்கள், 450 சீனியர் அதிகாரிகளும் பாதுகாப்பு, சேவை உள்ளிட்ட பணியில் இருப்பர். 3,000 கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு, கமாண்ட் கன்ட்ரோல் அறை மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும்

2,300 துப்புரவு தொழிலாளர்களுடன் கூடுதலாக 960 பேர் துப்புரவு பணி செய்ய நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அனில் குமார் சிங்கால் தெரிவித்தார்.

## "தமிழகத்தில் பாஜகவுக்கு ஒரு எம்.பி கூட இல்லை, ஆனாலும் பிரதமர் மோடி..."

### நிர்மலா சீதாராமன் பேச்சு




கோவில்பட்டி: செப்.21-

"தமிழகத்தில் பாஜகவுக்கு ஒரு எம்.பி. கூட இல்லை. அதனால் என்ன... அதுவும் பாரத நாட்டின் ஒரு பங்குதான் என நினைத்து பிரதமர் மோடி பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்" என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தீப்பெட்டித் தொழில் நூற்றாண்டு விழா கோவில்பட்டியில் இன்று நடந்தது. எஸ்.எஸ்.டி.எம். கல்லூரி வளாகத்தில் நடந்த விழாவுக்கு, நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் எஸ்.மகேஸ்வரன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் எஸ்.எஸ்.டி.கிருஷ்ணமூர்த்தி, பாஜக மாநில பொதுச் செயலாளர் ராம.ஸ்ரீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நேஷனல் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் எம்.பரமசிவம் தீப்பெட்டி தொழில் கடந்து வந்த பாதை குறித்து விளக்க உரையாற்றினார். எம்.எல்.ஏ.க்கள் கடம்பூர் செ.ராஜு, நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன், ஐடிசி நிறுவன நிதித்துறை தலைவர் சுரேந்தர் கே.ஷிபானி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தீப்பெட்டி தொழில் தொடர்பான கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். மேலும், தீப்பெட்டி தொழிலை சிவகாசிக்கு கொண்டு வந்த சண்முக நாடார், அய்யநாடார் ஆகியோர் உருவப் படங்களுக்கு மரியாதை செலுத்தினர். பின்னர், தீப்பெட்டித் தொழில் நூற்றாண்டு மலரை வெளியிட்டு, பெண் தொழிலாளர்களை கவுரவித்து அவர் பேசியதுது: "இந்த பூமியை பற்றி நிறைய பேர் பேசியுள்ளனர். மதுரையில் பிறந்த நான் சிறுவயதில் இருந்தே உறவினர்கள் மூலமாக தென் மாவட்டங்களை பற்றி ஏராளமான விஷயங்களை தெரிந்து கொண்டுள்ளேன்.

தென் மாவட்டங்கள் இந்த நாட்டின் நரம்பு. இங்குள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பவர்கள் இந்த நாட்டுக்கே பெருமை சேர்த்தவர்கள். வீரம், கவிதை, தேசப்பற்று என ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டே போகலாம். வானம் பார்த்த, வறட்சியான பூமியாக இருந்தாலும் கூட, தங்களது கைத்தொழிலால் இந்தப் பகுதிக்கு வாழ்வளிக்கக் கூடியவர்கள் இப்பகுதி பெண்கள்தான்.

பெண் தொழிலாளர்கள் முன்னிலையில் நடக்கக் கூடிய தொழில் தீப்பெட்டித் தொழில். அவர்களுக்கு தலைசார்ந்த வணக்கங்கள். வறட்சியான பூமியில், தன் வீட்டையும், தொழிலையும் காப்பாற்றிவிட்டு, இந்த பூமியில் இருந்து இவ்வளவு பெரிய தொழிலை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, இந்த ஊரில் உள்ள ஒவ்வொரு பெண்மணியை சார்ந்தது. பெண்களால் தான் தீப்பெட்டித் தொழில் இவ்வளவு தூரம் வந்துள்ளது. கட்டுப்பாடு, கைத்திறனோடு இந்த தொழிலை நடத்துகிறார்கள். பெண்கள்தான் இந்த வண்டிக்கு சக்கரம். சக்கரம் இல்லாமல் வண்டி நகராது. பெண் தொழிலாளர்கள் இல்லாமல் தீப்பெட்டித் தொழில் நடைபெறாது.

சின்ன வயதில் இருந்தே எனக்கு தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலை பற்றி நன்கு தெரியும். ஊரில் இருந்து யார் என்னை பார்க்க வந்தாலும் அவர்களை நான் கரிசனத்தோடு அணுகுவேன். ஒரு கோரிக்கை வந்தாலும் உடனே பிரதமரிடம் பேசுவேன். எனக்கு ஆதரவு கொடுத்தார் பிரதமர்.

தூத்துக்குடியில் மத்திய அரசு மூலமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பாஜகவுக்கு ஒரு எம்.பி. கூட இல்லை. எம்.பி. இல்லையென்றால் என்ன, அதுவும் பாரத நாட்டின் ஒரு பங்குதான், அங்கும் சிறப்பாக நாம் செயல்பட வேண்டும் என நினைத்து பிரதமர் மோடி பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு மீது பிரதமருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகம் உள்ளது.

இந்த விழாவை பிரதமருக்கான பாராட்டு விழாவாக கருதுகிறேன். அவருடைய ஆதரவு இல்லாமல் நாம் எதையுமே செய்திருக்க முடியாது. தென் மாவட்டங்களில் உள்ள பெரிய திட்டங்களுக்கு பிரதமர் தான் காரணம். SPOKE IN THE WHEEL என ஆங்கிலத்தில் சொல்வார்கள். ஒரு சக்கரத்தில் உள்ள ஆரங்களில் நானும் ஒரு ஆரம். ஆனால் அந்த சக்கரம் நமது பிரதமர். அவரால்தான் நமது நாட்டில் பல பேர், பல திட்டங்களின் மூலமாக முன்னேற்றத்துக்கு வழிவகுக்கிறார்.

2047ம் ஆண்டுக்குள் முன்னேற்றமடைந்த இந்தியா என்ற நிலைக்கு எடுத்துச் செல்ல பல முயற்சிகளை எடுக்கிறார் பிரதமர். 2047ம் ஆண்டுக்குள் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழில் நமது நாட்டு வர்த்தகத்துக்கு எந்த விதத்தில் பங்காற்ற முடியும் என்பது குறித்து நீங்களே ஒரு வழிவகுத்து, திட்டத்தை தயாரித்து கொடுத்தால், அதற்கு ஏற்ற விதமாக என்னென்ன மத்திய அரசு மூலமாக கொடுக்க முடியும் என்பதற்கான முயற்சியில் நான் முழுமையாக ஈடுபடுவேன்.

இந்த மாவட்டங்கள் முன்னேற்றமடைய, உங்களது தொலைநோக்கு அறிக்கையை கொடுத்தால், எல்லோருக்கும் உதவும் வகையில் அதை மத்திய அரசு மூலமாக செய்து கொடுக்க முடியும். தீப்பெட்டித் தொழில் இன்னும் 200 ஆண்டுகளுக்கு நன்றாக இருக்க அரசு என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து சொன்னால் உபயோகமாக இருக்கும்.

கடம்பூர் ராஜு தனது தொகுதிக்கு என்ன வேண்டுமோ அதைப்பற்றி பேசிக் கொண்டே இருப்பார். அந்த மாதிரி ஒரு எம்எல்ஏ இருப்பதால் உங்கள் குறைகள் தீர்க்கப்படுகிறது. 2026ல் உங்களுக்கு எம்.எல்.ஏ.வோ, 2029ல் எம்.பி.யோ உங்கள் கஷ்டத்தை புரிந்து வேலை செய்யக் கூடிய கடம்பூர் ராஜு மாதிரியானவர்களை தேர்ந்தெடுங்கள்.

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர், தென் மாவட்டங்களை இணைத்து, எதிர்காலத்தில் வணிகம் மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு தேவையான தொலைநோக்கு திட்ட அறிக்கை தயாரித்துக் கொடுத்தால், 2047ம் ஆண்டுக்கு முன்னர் நல்ல திட்டங்கள் மூலம் இந்த மாவட்டங்களை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லும் முயற்சியில் நாம் அனைவரும் ஈடுபடுவோம்.

இந்த முறை ஜிஎஸ்டியில் சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை. புரட்சி செய்யப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு பெரிய மாற்றத்தை எடுத்து வந்திருக்கிறோம். 375 பொருட்களுக்கு விலை குறைந்துள்ளது. 28 சதவீதத்தில் இருந்து 18 ஆகவும், 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரக்கூடிய ஆதாயம் என்பது மக்களுக்கான ஜிஎஸ்டி சேமிப்பு என்பதுதான். ஜிஎஸ்டி வரிக்குறைப்பினால் கிடைக்கும் சேமிப்பை உங்கள் குடும்ப நலனுக்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஜிஎஸ்டி புரட்சியை, பிரதமர் மோடி மக்களுக்கு தீபாவளி பரிசாக வழங்கியுள்ளார். நமது நாட்டின் முன்னேற்றத்துக்கு எல்லாரும் வழிவகுக்க வேண்டும்" என்று அவர் பேசினார்.

## ரூ.1000 கோடியில் சபரிமலை ஐயப்பன் கோயில் சீரமைப்பு: கேரள முதல்வர் பினராயி விஜயன் தகவல்

திருவனந்தபுரம், செப்.21-

சபரிமலை ஐயப்பன் கோயில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கேரள அரசும் திருவிதாங்கூர் தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் சர்வதேச ஐயப்ப பக்தர்கள் சங்கமம் நிகழ்ச்சி பம்பையில் இன்று காலை தொடங்கியது. முதல்வர் பினராயி விஜயன் சங்கமத்தை தொடங்கிவைத்தார். இதில், தமிழக அமைச்சர்கள் சேகர் பாபு, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய முதல்வர் பினராயி விஜயன், "காலம் மாறிக்கொண்டே இருக்கிறது. சபரிமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப நாம் சிந்திக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே 2011-12ம் ஆண்டில் சபரிமலை மாஸ்டர் பிளான் தொடங்கப்பட்டது. மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ.148.5 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த திட்டத்தை தடுக்க சிலர் நீதிமன்றத்துக்குச் சென்றனர். இது துரதிருஷ்டவசமானது. ஐயப்பன் மீதான பக்தியா, வனப் பாதுகாப்பு மீதான அக்கறையா, மத தூய்மையா? ஆனால், இவை எதுவும் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும்.

2019ம் ஆண்டு கோவிட் பெருந்தொற்று நெருக்கடியின்போது, தேவசம்போர்டின் தினசரி செயல்பாடு கூட நெருக்கடியில் இருந்தது. அந்த நேரத்தில், அரசாங்கம், வாரியத்துக்கு ரூ.140 கோடி நிதி உதவியை வழங்கியது. மேலும், புதுப்பித்தல் பணிக்காக ரூ.123 கோடியை வழங்கியது. சபரிமலையின் அடிப்படை முகாமாக உள்ள நிலக்கல்லின் மேம்பாட்டுத் திட்டத்துக்கு 2020ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. கடந்த ஜனவரியில் சன்னிதானம் மற்றும் பம்பா ஆகிய இரண்டுக்குமான மலையேற்றப் பாதைகளை மேம்படுத்த அரசாங்கம் ஒப்புதல் வழங்கியது. சபரிமலை மாஸ்டர் பிளான் என்பது சன்னிதானம், பம்பா, பாரம்பரிய பாதைகள், நிலக்கல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையமாகக் கொண்டது. 2050க்கும் இந்த திட்டங்கள் நிறைவடையும். சன்னிதான மேம்பாட்டுக்காக முதல் கட்டமாக 2022-27க்குள் ரூ.600.47 கோடியும், இரண்டாம் கட்டமாக 2028-33க்குள் ரூ.100.02 கோடியும், மூன்றாம் கட்டமாக 2023439க்குள் ரூ.77.68 கோடியும் ஒதுக்கப்படும். பம்பாவைப் பொறுத்தவரை, ரூ.207.97 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். மலையேற்றப் பாதையை மேம்படுத்த ரூ.47.97 கோடி ஒதுக்கப்பட இருக்கிறது. ஒட்டுமொத்தமாக சன்னிதானம், பம்பா மற்றும் மலையேற்றப் பாதைகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக ரூ.1,033.62 செலவிடப்பட இருக்கிறது.

எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டே இந்துக்களின் வாக்குகளை ஈர்க்கும் நோக்கில் இந்த சங்கமம் நிகழ்ச்சி நடத்தப்படுவதாக காங்கிரஸ், பாஜக உள்ளிட்ட கட்சிகள் கூறுவது தவறு. இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி. அதேபோல், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சிறுபான்மையினருக்கான நிகழ்ச்சி ஒன்றை கேரள அரசு நடத்தும் என்று கூறுவதும் உண்மையல்ல. சிறுபான்மையினருக்கான நிகழ்ச்சிகள் துறைசார்ந்த முறையில் நடத்தப்படும். ஆனால், வேண்டுமென்றே சிலர், தவறான தகவல்களைப் பரப்புவதற்காக அவ்வாறு கூறுகின்றனர்" என தெரிவித்தார்.



# ஜல்லிக்கட்டு நல்லமணி அய்யனார் கோவில் மஞ்சுவிரட்டு காளை மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

சிவகங்கை, செப்.21-

சிவகங்கை மாவட்டம் படமாத்தூர் அருகே உள்ள மாத்தூர் நல்ல மணியாருடைய அய்யனார் கோவில் நல்லமணி காளை 36 வாடிவாசல் களங்கண்டு வெற்றிகளை மட்டுமே சூடிய கொம்பன் என்ற பெயர் சூட்டப்பட்ட காளை எதிலும் பிடிபட்டது கிடையாது என்றும் கூறினார்கள் மேலும் அந்தக் காளையில் இறப்பு பெரும் மன வருத்தத்தை அளிக்கிறது என்றும் அந்த காலையும் நினைவாக இன்று மூன்றாம் ஆண்டு நினைவு நாளை திருவிழா கோலமாக கொண்டாடி மகிழ்ந்த கிராமத்து மக்கள் மன நெகிவுடன் இருந்தனர் அதே நேரத்தில் காலை இழந்த வருத்தம் அவர்கள் கண்களில் தெரிய வந்தது இந்த காளை கிராமத்தர் சார்பாக இளம் கன்றாக இருக்கும் பொழுதே கோவிலுக்கு நேர்ந்து விடப்பட்ட காளை பல களம் கண்டு வெற்றி வகை சூடி வந்ததாகவும் இளைஞர்கள் பெருமிதம் கொண்டனர் மாத்தூர் கிராமத்து இளைஞர்கள் சிறப்பாக நடத்தி வழிபட்டனர் மேலும் இந்தக் காளைக்கு கிராமத்தார்கள் சார்பாக மாத்தூர் கிராமத்து மக்கள் தன்னார்வலர்கள் இணைந்து 7 லட்சம் மதிப்பீட்டில் காளைக்கு மணிமண்டபம் கட்டி சிலை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் தெரிவித்தனர் மேலும் ஏராளமானவர்க்கு அன்னதானம் சைவ பிரியாணி தயிர் சாதம் கலவை சாதம் என மூன்று வகையான சாதம் மற்றும் கூட்டு வகைகள் பொதுமக்களுக்கு அன்னதானமாக வழங்கப்பட்டது.

# ஒரு லட்சம் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் இலக்கு: மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப் பாண்டியன்

மதுரை, செப்.21-

திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான கலைஞர் கருணாநிதியின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் 2,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் உள்ள விரகனூர் ஊராட்சியில்நடைபெற்றது.




இந்த விழா, மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு. மணிமாறன் தலைமையிலும், திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் தனபால் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில், மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் ஷி. கிருத்திகா தங்கபாண்டி, 2,000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து, திமுக அரசின் சாதனைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்து கிருத்திகா தங்கபாண்டி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சிவகாசி வனராஜா, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர ஏர்போர்ட் பாண்டி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும், திமுக கிளை செயலாளர் பா.சந்திரன், மாவட்ட பொருளாளர் கொம்பாடி தங்கம், மாநில தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் பாச பிரபு, மாவட்ட இலக்கிய அணியின் துணை அமைப்பாளர் தமிழ் ராஜா, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பிரமிளா பீமன், மகளிர் அணி நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், திமுக முன்னோடிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சிவகங்கை சட்டமன்றத் தொகுதி திமுக இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்

## நாகனி பா.செந்தில்குமார், கிங் கார்த்திக், எஸ்.எம்.மதிவாணன் பங்கேற்பு

சிவகங்கை, செப்.21-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி திமுக இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிங் கார்த்தி, எஸ். எம். மதிவாணன் ஆகியோரது தலைமையிலும் ஒன்றிய திமுக செயலாளர்களான காளையார்கோவில் கிழக்கு, மேனாள் சேர்மன் வே. ஆரோக்கியசாமி , திருமலை முத்துராமலிங்கம் , வெள்ளலூர் நாடு அம்பலகாரர் கண்டாங் கிபட்டி பெ. மந்தக்காளை, ஆர். எம். கென்னடி, யோக கிருஷ்ணகுமார் ஆகியோரது முன்னிலை யிலும் நடைபெற்றது...



மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் பா. செந்தில் குமார் , கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்...

அப்போது கிளைக்கழகங்களில் இளைஞரணி நிர்வாகிகளை அமைப்பதற்கான பணிகளை விரைவில் முடித்திடுதல் உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்..

இந்த நிகழ்ச்சியில் நகர அமைப்பாளர் சேகர்பரத், ஒன்றிய அமைப்பாளர்கள் சக்திதாசன், காளையார் கோவில் கிழக்கு முத்துப் பாண்டியன், துரை. கண்ணன், வண்டவாசி தங்கம், வேல்முருகன், துணை அமைப்பாளர்களான கீரனூர் கணேசன் , தென்றல் நகர் சுரேஷ், பையூர் சுகுமார், உதயநிதி குணா , கர்ண. அருண்குமார் , அழகுசுந்தரம் , கண்டாங்கிபட்டி சரவணன், அருண்குமார் , கௌதம், கரண்,மோகன்,முத்து , ஒன்றிய ஐடி விங் தமறாக்கி அம்பலம், திரவியம் உள்ளிட்ட ஏராளமான இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட துணை அமைப்பாளர்களான எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்தி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்...

# கணிம்யபாடி அடுத்த சோழவரம் அரசு மேல்நிலைப் பள்ளியில், ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக ஆறு வகுப்பறை கட்டிடத்திற்கு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டு விழா

## மாவட்ட ஆட்சியர் மற்றும் அணை சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு

வேலூர், செப்.21-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, கணியம்பாடி வட்டம், சோழவரம் ஊராட்சி, சோழவரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக ஆறு வகுப்பறை கட்டிடத்திற்கு பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினர். தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று (20.09.2025) சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கிலிருந்து காணொளி காட்சி வாயிலாக வேலூர் மாவட்டத்தில் 16 பள்ளிகளில் ரூ.19.05 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள். ஆய்வகம் மற்றும் கழிவறை கட்டும் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, அணைக்கட்டு சட்டமன்ற



உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், சோழவரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.48 கோடி மதிப்பில் 6 கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிக்கு மேளதாளங்கள் முழங்க பூமி பூஜை செய்து, அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கணியம்பாடி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் கஜேந்திரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுடலைமுத்து, உதவி செயற்பொறியாளர் படவேட்டான், ஒன்றியக்குழு உறுப்பினர் ஜெ.லதா ஜெயசீலன், சோழவரம் ஊராட்சி மன்ற தலைவர் அமுதா ஜெயபால், அணைக்கட்டு வட்டாட்சியர் சுகுமார், வேலூர் வட்டாட்சியர் வடிவேலு, பள்ளி தலைமை ஆசிரியர் தனஞ்செழியன், பொதுப்பணித்துறை தொழில்நுட்ப உதவியாளர் பழனி, சீனிவாசன், திமுக ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பென்னாத்தூர் பேரூராட்சி திமுக தலைவர் அருள்நாதன், ஒப்பந்ததாரர் காசி, பள்ளி நிர்வாகிகள் செல்வகுமார், கோவிந்தராஜ், சரண்யா, கணியம்பாடி தெற்கு ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் வசந்தகுமார், பாலு, சோனு (எ) கௌதமன், பள்ளி ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இறுதியில் ஆசிரியர் சூரியகுமார் நன்றியுரையாற்றி பூமி பூஜை அடிக்கல் நாட்டு விழா நிறைவுபெற்றது.



# சோழிங்கநல்லூரில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

சோழிங்கநல்லூர், செப்.21-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, ஜி.பி.ஜனகராஜ் திருமண மண்டபத்தில் அக்கரை (செப்.19) “உங்களுடன் ஸ்டாலின்” முகாம் நடைபெற்றது. தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க.,கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.,மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின் கீழ், பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்து எம். எல். ஏ. எஸ். அரவிந்த் ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார். பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் சில துறைகளின் மூலம் சான்றிதழை வழங்கினார். தொடர்ந்து முகாமில் மக்களை தேடி மருத்துவ, பட்டா, ஜாதி சான்றிதழ், மகளிர் உரிமைத்தொகை எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் பொதுமக்களின் குறைகளை கண்டறிந்து தீர்வு காண தான் இந்த முகாம் என்று தெரிவித்தார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஓப்போ இந்தியாவின் புதிய F31 5G Series கோவையில் அறிமுகம்

கோவை, செப்.21-

கோவை ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் ஓப்போ இந்தியா தனது பிரபலமான எஃப் வரிசையில் புதிய எஃப்31 5G தொடரையை அறிமுகம் செய்துள்ளது. இந்திய வாடிக்கையாளர்களின் நீண்டகால நம்பிக்கையும், மென்மையான செயல்திறனும் தேவையெனவும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்த வரிசை, எஃப்31 ப்ரோ+, எஃப் 31 ப்ரோ மற்றும் எஃப் 31 என்ற மூன்று மாடல்களில் கிடைக்கிறது. வலுவான கட்டமைப்பு, நீண்ட ஆயுள் பேட்டரி, வெப்பம் குறைக்கும் திறன் மற்றும் வலுவான இணைய இணைப்பு வசதிகளை கொண்ட இந்த ஸ்மார்ட் போன்கள், இந்திய சந்தையில் ரூ 35,000 க்குக் கீழ் கிடைக்கும் மிக உயர்தர சாதனங்களாகும். சாப்ட்வேர் மட்டத்தில் ஓப்போவின் டூயல் எஞ்சின் ஸ்மூத்னஸ் சிஸ்டம் மற்றும் லுமினஸ் ரெண்டரிங் இன்ஜின் மூலம், ஸ்மார்ட்போன் 72 மாதங்கள் 6 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக மென்மையாகவும் நம்பகமாகவும் செயல்படக்கூடியதாக உள்ளது. மேம்பட்ட ஏஐ மற்றும் கேமரா வசதிகள் 50 மெகா பிக்சர்ஸ் மெயின் கேமரா, 32 மெகா பிக்சல் செல்ஃபி கேமரா மற்றும் பல ஏஐ வசதிகள் உள்ளன. 4கே வீடியோ பதிவு செய்யும் திறனும் கொண்டது.

7,000mAh பேட்டரி, 80W சூப்பர்வூக் ஃப்ளாஷ் சார்ஜ் மூலம் 30 நிமிடங்களில் 58% சார்ஜ், ரிவர்ஸ் சார்ஜிங் மற்றும் பைபாஸ் சார்ஜிங் வசதிகள். பேட்டரி ஆயுள் 5 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கும் மேலும் எஃப் 31 தொடரை செப்டம்பர் 19, 2025 முதல் இந்திய முழு நாடு பரப்பு ஆஃப்லைன் மற்றும் ஆன்லைன் ஓப்போ இஸ்டோர், ஃப்ளிப்கார்ட், அமேசான் சேனல்களில் கிடைக்கும். என்றனர்.



# வேலூர் விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் இல்ல திருமண வரவேற்பு விழா

வேலூர், செப்.21-


வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் கோ. விசுவநாதன் பேத்தி காதம்பரி எஸ். விசுவநாதன் ஏ.ஷ்ரவன் கிருஷ்ணா திருமண வரவேற்பு விழா பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நடைபெற்றது. வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன் பேத்தியும், துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன் ரமணி பாலசுந்தரத்தின் மகளும், விஐடி உதவி துணைத் தலைவருமான காதம்பரி எஸ்.விசுவநாதன் டாக்டர் ஏ.ஷ்ரவன் கிருஷ்ணா ஆகியோரின் திருமணம் திருப்பதியில் கடந்த வாரம் நடந்தது. அதைத்தொடர்ந்து, விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் காதம்பரி எஸ.விசுவநாதன் ஏ.ஷ்ரவன் கிருஷ்ணா திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. விஐடி வேந்தர் கோ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற திருமண வரவேற்பு விழாவில் தமிழக அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.காந்தி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எம்.பி. கதிர் ஆனந்த், சட்டப்பேரவை துணை சபாநாயகர் பிச்சாண்டி, எம்.எல்ஏக்கள் நந்தகுமார் கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், அமலு, சரவணன், ரவி மற்றும் அதிமுக முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி, பாமக கௌரவ தலைவர் ஜி.கே. மணி மற்றும் புதுச்சேரி எம்எல்ஏ சிவா, புதுச்சேரி முன்னாள் சபாநாயகர் சிவக்கொழுந்து, முன்னாள் எம்எல்ஏ ஞானசேகரன், சித்தூர் முன்னாள் எம்எல்ஏ வெங்கடேஸ்வரா சவுத்ரி, அதிமுக மாவட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.கே.அப்பு, வேலழகன், சுகுமார், அமமுக மாவட்டச் செயலாளர் பார்த்திபன், மற்றும் பாரதிதாசன் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கோ.பாரதி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சியினர், பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

மேலும் மியான்மர் கல்வி துறை துணை அமைச்சர் ஜா மின்ட், சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தின் துணை ஆணையர் கணேசநாதன் கதீஸ்வரன் மற்றும் பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டனர். வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன், மேயர் சுஜாதா, இஸ்ரோ விஞ்ஞானி எஸ்.புருஷோத்தமன், தி ஜிகே சர்வதேச பள்ளி நிர்வாக இயக்குனர் வினோத் காந்தி மற்றும் தொழிலதிபர்கள், முக்கிய உறவினர்கள், பத்திரிகையாளர்கள் சங்க தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

திருமண வரவேற்பு நிகழ்வில் விஜடி பல்கலைக்கழக துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன் ரமணி பாலசுந்தரம், சேகர் விசுவநாதன் சந்தியா பென்டரெட்டி, ஜி.வி.செல்வம் அனுஷா செல்வம் உள்ளிட்டோர் விருந்தினரை வரவேற்று உபசரித்தனர். உத்தரபிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், திருமண வரவேற்பு விழாவையொட்டி வாழ்த்து மடல் அனுப்பி மணமக்களை வாழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

# கொடைக்கானளில் வியாபாரிகலிடயே கடும் மோதல்

திண்டுக்கல், செப்.21-



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பெருமாளைமலை பகுதியில் ராஜா என்பவர் பழக்கடை நடத்திவருகிறார் இவர் நேற்று பழனி பகுதியிலிருந்து கொடைக்கானல் பகுதிக்கு வெங்காயம் விற்பனை செய்ய வந்த வியாபாரியிடம் வெங்காயம் வாங்கியப்போது அவர்கள் கொண்டுவந்த வெங்காயம் சரியில்லை என்று திருப்பி கொடுத்துள்ளனர் அதனால் வெங்காய வியாபாரி மதுப்போ தையில் இருந்ததால் அவர் ராஜா என்பவரின் மனைவி உள்ளிட்டோரை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார் இருந்தாராப் பினருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் கலைந்து சென்றனர் மறுநாள் வெங்காயவியாபாரி தனது குடும்பத்தினருடன் கொடைக்கானல் வந்து ராஜா என்பவரின் கடையில் சாக்லேட் வாங்குவது போல் ராஜா என்பவரின் கடைக்கு சென்று அவர்களிடம் தகாத வார்த்தைகளால் பேசி கடையில் உள்ள பொருட்களை சேதப்படுத்தி ராஜா மற்றும் அவரது மனைவி, தம்பி மற்றும் கடை ஊழியர்களை இரும்பு கம்பி மற்றும் உருட்டு கட்டைகளால் தாகினர் பலத்த காயம் அடைந்த ராஜா குடும்பத்தினர் சிகிச்சைக்காக கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனார் தவகல் அறிந்த கொடைக்கானல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்



# தமிழ்நாடு விஸ்வகர்மா மக்கள் இயக்கம் சார்பில் ஸ்ரீ விஷ்வ பிரம்ம ஜெயந்தி விழா

கோவை, செப்.21-

கோவை மாவட்டம் கோவை பூ மார்க்கெட் அருகிலுள்ள ஸ்ருதி ஹாலில், தமிழ்நாடு விஸ்வகர்மா மக்கள் இயக்கம் சார்பில் ஸ்ரீ விஸ்வ பிரம்ம 12 ஆம் ஆண்டு ஜெயந்தி விழா, மற்றும் மாநில மாவட்ட பொறுப்பாளர்கள் அறிமுக விழா நடைபெற்றது.

இவ்விழாவானது ஸ்ரீ நாக தேவதை அம்மன் குரு பீடத்தின் நிறுவனரும் மாநில பொதுச் செயலாளருமான விஸ்வகர்மா ஜெகத்குரு பீடாதிபதி டி.கே. சக்கரவர்த்தி ஆச்சாரியார் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாநில தலைவர் ச. அழகிரிசாமி, மாநில பொருளாளர் சி.ஹரிஹரன், முன்னிலை வகிக்க மாநில அமைப்பாளர் மா.அய்யனார், மாநில ஒருங்கிணைப்பாளர் மா.முருகேசன், மாநில துணைத்தலைவர் எஸ்.எஸ். சுந்தரம், மாநில துணைச் செயலாளர் லோ. வீரமணி, ஆகியோர் முன்னிலை வகிக்க, விழாவில் சிறப்பு அழைப்பாளராக கோவை மாநகர் மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக செயலாளரும் கோவை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான அம்மன் கே. அர்ஜுனன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் நிகழ்ச்சியில் ஹரிஓம் இந்து சேவா சங்கத்தின் நிறுவனர் பொன்மணி ஆச்சாரியார், சிவ சேனா கட்சியின் கோவை மாநகர் மாவட்ட தலைவர் மருது, மற்றும் மாவட்ட பொதுச் செயலாளர் அயோத்தி ரவி, திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த ஆர்.சிவகுமார் ஆச்சாரியார், ஸ்ரீ தொட்டிச்சியம்மாள், சின்னம்மாள், சின்னையா, பாப்பாத்தியம்மாள், முனியப்பன், இந்து மக்கள் கட்சியின் கோவை கோட்ட துணை தலைவர் கே.சதீஷ்குமார், விஸ்வகர்மா ஜி.எஸ். ஆர். ஹரிகிருஷ்ணன், சூர்யா நற்பணி இயக்கத்தின் கோவை மாவட்ட தலைவர் சுனில், வள்ளலார் சத்தியஜோதி அறக்கட்டளையின் நிறுவனர் ஆர்.எம். சிவகணேசன் உள்ளிட்ட ஏராளமானோர் ஸ்ரீ விஸ்வ பிரம்ம 12 ஆம் ஆண்டு ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவின் இறுதியில் ஹரிஓம் இந்து சேவா சங்கத்தின் நிறுவனர் பொன்மணி மற்றும் ஸ்ரீ நாக தேவதை அம்மன் குரு பீடத்தின் நிறுவனரும் மாநில பொதுச் செயலாளருமான விஸ்வ கர்மா ஜெகத்குரு பீடாதிபதி டி.கே.சக்கரவர்த்தி ஆச்சாரியார் ஆகியோர் செய்தியாளர்களுக்கு சிறப்பு பேட்டி அளித்தனர்.



உலகம் போற்றும் பாரத பிரதமர் நரேந்திர மோடி தாமோதர்தாஸ் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# பாரத சேவா ஆசிரமம் சார்பில் தன்னார்வலருக்கு பாராட்டு விழா மற்றும் அன்னதானம் வழங்கும் விழா

கோவை, செப்.21-

கோவை ஆர்எஸ்புரம் மாதேஸ்வரன் கோவில் அருகில் பாரத சேவா ஆசிரமம் சார்பாக பாரத பிரதமர் நரேந்திர மோடி தாமோதர்தாஸ் பிறந்தநாள் விழா கொண்டாட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மத்திய அரசின் நலத்திட்டங்களை ஏழை மக்களுக்கு பயனளிக்கும் சேவையில் ஈடுபட்டு வரும் தன்னார்வலர்களை ஆதரிக்கும் வகையில் சால்வை மற்றும் துளசி மாலை அணிவித்து கௌரவிக்கும் நிகழ்ச்சி தேனி.ச.கண்ணன் தலைமையில் நடைபெற்றது..

இதில் பேரளிக்களம் கிருஷ்ணதாஸ், பிளாச்சிமடா ஹரிஹர சுதன், தச்சம் குன்னு சுரேந்திரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து தன்னார்வலர் தேனி.ச.கண்ணனை சால்வை துளசி மாலை அணிவித்து கௌரவித்தனர்.... பின்னர் அன்னதானத்தை துவக்கி வைத்தனர்..

இது குறித்து தேனி கண்ணன் கூறுகையில் இன்று பிறந்தநாள் காணும் நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி ஐயா அவர்கள் நீண்ட ஆயுளுடன் அனைத்து செல்வங்கள் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் மேலும் அவரது பணி வாழ்நாள் முழுவதும் மென்மேலும் தொடர வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன் அவரது வழியில் பயணிக்கும் என்னை போன்ற தன்னார்வலர்களுக்கு அவர் ஒரு உந்து சக்தியாக இருக்கிறார் மேலும் என்னை ஊக்குவிக்கும் அனைவருக்கும் என்னை கௌரவித்த சான்றோர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார்...

இந்நிகழ்ச்சியில் பாரத சேவா ஆசிரமம் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் சமூகர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்...

# மிகவும் அரிதான கண் கட்டிகளை அகற்றுவதில் புதிய சாதனை படைத்திருக்கும் மீனாட்சி மருத்துவமனை தஞ்சாவூர்

தஞ்சாவூர், செப்.21-

தமிழ்நாட்டில் பிரபல மருத்துவமனைகளுள் ஒன்றான மீனாட்சி மருத்துவமனை தஞ்சாவூர், பார்வை நரம்புகள் மீதான அழுத்தத்தால் பார்வைத்திறன் இழக்க நேரிடும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருந்த இரு விவசாயிகளுக்கு மிகவும் அரிதான கண் கட்டிகளை வெற்றிகரமாக அகற்றியதன் மூலம் பார்வைத்திறனை காப்பாற்றியிருக்கிறது. இந்த கட்டிகளை அகற்றியதோடு சேர்த்து, அழகியல் ரீதியாக பாதிப்பு இல்லாததை உறுதிசெய்ய கண்குழி சுவர்களையும் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை குழுவினர் சீரமைத்திருக்கின்றனர்.




30 வயதான ஒரு விவசாயிக்கு செய்யப்பட்ட ஸ்கேன் சோதனையில் கண் குழிக்கு உள்ளே 3x2x3 அளவுள்ள ஒரு கட்டி மூளைக்குள் நீண்டிருப்பது கண்டறியப்பட்டது. கண் குழியின் உட்புற தசைப்பகுதிக்குள், கண் அசைவை கட்டுப்படுத்துகின்ற தசைகளால் சூழப்பட்ட ஒரு இடத்தில் அக்கட்டி அமைந்திருந்தது. இன்ட்ராகோனல் டெர்மாய்டு என அழைக்கப்படுகின்ற இப்பாதிப்பு மிகவும் அரிதானதாகும்; உலகளவில் இதுவரை சுமார் 40 நபர்களுக்கு மட்டுமே இப்பாதிப்பு இருந்ததாக தரவுகள் வெளிப்படுத்துகின்றன. இரண்டாவது நோயாளியான 40 வயதான ஒரு விவசாயிக்கு வலது கண்ணில் 11x7x6 செ.மீ. என்ற அளவுள்ள ஒரு பெரிய கட்டி இருப்பது பரிசோதனையில் கண்டறியப்பட்டது. எக்ஸ்ட்ராகோனல் எபிடெர்மாய்டு என அழைக்கப்படும் இப்பாதிப்பு நிலையில் அக்கட்டி, மூளை மற்றும் மண்டையோட்டின் அடிப்பகுதி வரை நீண்டிருந்தது. உலகளவில், இதுநாள் வரை இதே போன்ற 60 நேர்வுகள் மட்டுமே அறியப்பட்டிருக்கின்றன.

கண்குழியின் தசைக்குள் 3x2 செ.மீ.அளவுள்ள இன்ட்ராகோனல் டெர்மாய்டு கட்டியை அகற்ற, ரூஃப் ஆர்ட்டிபிட்டோடோமி மற்றும் கண்ணில் தசைக்கூம்பிற்கு வெளியே 11x7x6 செ.மீ அளவுள்ள எக்ஸ்ட்ராகோனல் எபிடெர்மாய்டு என்ற புதுமையான நரம்பியல் அறுவைசிகிச்சை அணுகுமுறைகளைப் பயன்படுத்திய அறுவை சிகிச்சை நிபுணர்களின் குழு, இந்த இரு நோயாளிகளிடமிருந்து இரு கட்டிகளையும் வெற்றிகரமாக அகற்றியிருக்கிறது. ரூஃப் ஆர்ட்டிபிட்டோடோமி செயல்முறையில் கட்டியை அகற்ற அணுகுவதற்கு கண் குழியின் மேற்புற சுவரின் எலும்பு தற்காலிகமாக அகற்றப்பட்டது. லேட்ரல் ஆர்பிட்டோடோமி என்ற ஒரு தனிச்சிறப்பான செயல்முறையில், கண்ணின் தசைக்கூம்பிற்கு வெளியே அமைந்துள்ள கட்டியை அகற்ற அணுகுவதற்காக ஒரு நேரடியான மற்றும் பாதுகாப்பான அணுகல் உருவாக்கப்பட்டது. கண் குழியின் இயற்கையான தோற்றத்தை இந்நோயாளிகளுக்கு திரும்பவும் உருவாக்குவதற்காக அவற்றின் மறுசீரமைப்பு அறுவைசிகிச்சைகளும் இம்மருத்துவமனையில் செய்யப்பட்டன.

மூளை நரம்பியல் அறுவைசிகிச்சையின் முதுநிலை நிபுணரான டாக்டர். N. அருண்குமார் தலைமையிலான அறுவை சிகிச்சைக் குழுவினர், இந்த இரு நுட்பமான மருத்துவ செயல்முறைகளையும் துல்லியமாக திட்டமிட்டு வெற்றிகரமாக செயல்படுத்தியிருக்கின்றனர். பார்வைத்திறனையும், கண்ணின் இயக்கத்தையும் பாதுகாக்க அதே நேரத்தில் கட்டிகள் முழுமையாக அகற்றப்படுவதை இந்த சிகிச்சை செயல்முறைகள் உறுதி செய்திருக்கின்றன. மருத்துவமனையின் நரம்பியல் அறுவை சிகிச்சை முதுநிலை நிபுணர் டாக்டர் அருண்குமார் கூறியதாவது: "இந்தத் தீங்கற்ற கட்டிகளை அகற்ற, நாங்கள் மிகவும் துல்லியமான அறுவை சிகிச்சை முறைகளைக் கையாண்டோம். ஒரு நோயாளிக்கு, கண் குழியின் தசைக்கூம்பிற்குள் ஆழமாக 'இன்ட்ராகோனல் டெர்மாய்டு' கட்டி இருந்தது. பொதுவாக, டெர்மாய்டு கட்டிகள் தசைக்கூம்பிற்கு வெளியேதான் காணப்படும்; உள்ளே இருப்பது மிகவும் அரிது. இதற்கு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்காவிட்டால், கண்கள் படிப்படியாகப் பிதுங்கிக்கொண்டு பார்வை பாதிக்கப்படும். இந்தக் கட்டி கண் குழிக்குள் மிகவும் ஆழமாக இருந்ததால், 'ரூஃப் ஆர்பிட்டோமி' எனப்படும் அறுவை சிகிச்சை அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம், கண் குழியின் மேற்பகுதி எலும்பின் ஒரு பகுதியைத் தற்காலிகமாக அகற்றி, கட்டியை முழுமையாக நாங்கள் நீக்கினோம். மற்றொரு நோயாளிக்கு, 11x7x6 செ.மீ அளவிலான மிகப் பெரிய 'எக்ஸ்ட்ராகோனல் எபிடெர்மாய்டு' கட்டி இருந்தது. இது கண் குழியின் தசைக்கூம்பிற்கு வெளியே இருந்து, மூளை மற்றும் மண்டையோட்டின் அடிப்பகுதி வரை பரவி, கண்ணில் ஆழமான அழுத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்தக் கட்டியை அகற்ற, 'லேட்டரல் ஆர்பிட்டோமி' என்ற சிறப்பு அறுவை சிகிச்சையை மேற்கொண்டோம். இந்த முறை, தசைக்கூம்பிற்கு வெளியே உள்ள கட்டிகளை நேரடியாகவும் பாதுகாப்பாகவும் அணுக உதவுகிறது. இந்த இரண்டு அறுவை சிகிச்சைகளுமே மிகவும் சிக்கலானவை. கட்டிகளைப் பாதுகாப்பாக அகற்ற, மண்டையோட்டில் சிறிய துளையிட்டு நாங்கள் மேற்கொண்டோம். சிகிச்சைக்குப் பிறகு, இரு நோயாளிகளின் இயல்பான முகத்தோற்றத்தை மீட்டெடுப்பதற்காக, கண் குழிச் சுவர் சீரமைப்பு சிகிச்சையும் செய்யப்பட்டது. மேலும், ஒரு நோயாளிக்கு அறுவை சிகிச்சையின் துல்லியத்தை அதிகரிக்க எண்டோஸ்கோப் கருவி பயன்படுத்தப்பட்டது. சிகிச்சையின் முடிவில், இரு நோயாளிகளும் முழுமையாகப் பார்வையைத் திரும்பப் பெற்றுள்ளனர். அவர்களின் முகத்தோற்றம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. மிக முக்கியமாக, இந்தச் சிக்கலான அறுவை சிகிச்சைகளின் போது மூளையின் முக்கியப் பகுதிகளுக்கோ திசுக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இது எங்களுக்கு மிகுந்த மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது."

தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனயின் துணை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். V. பிரவீன் மற்றும் மயக்கவியல் துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர் ஜி. அரிமாணிக்கம் இந்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்வில் பங்கேற்றனர்.



# ஜூஸ் கடை நடத்திவரும் வடமாநில இளைஞரை தாக்கி செல்போன் பறித்த 4 பேர் கைது

காரைக்குடி, செப்.21-

காரைக்குடி அருகே உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் சுராஜ் பர்கவ் 20. இவர் ஆவடைபொய்கை திருச்சி ராமேஸ்வரம் நெடுஞ்சாலை அருகே ஜூஸ் கடை நடத்தி வருகிறார்.

இவரது கடையில், நான்கு பேர் ஜூஸ் குடித்துள்ளனர். அவர்களிடம் ஜூஸ் குடித்ததற்கு சுரஜ் பணத்தை கேட்டுள்ளார். அந்த 4 பேரும், பணத்தை கொடுக்காமல் அவரை தாக்கியதோடு அவரிடமிருந்து செல்போனையும் ப்ளூடூத் ஹெட்போனையும் பறித்துச் சென்றனர். இதுகுறித்து குன்றக்குடி போலீசாருக்கு தகவல் கிடைத்தது. ஏ.எஸ்.பி., ஆசிஸ் புனியா உத்தரவின் பேரில் எஸ்.ஐ.,பழனிக்குமார் தலைமையில் போலீசார் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் ஆய்வு மேற்கொண்டனர். விசாரணையில், மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த நாடிமுத்து அவரது அண்ணன் வெங்கடேஷ் மற்றும் நண்பர்கள் பாலச்சந்தர், முத்துமணி என்பது தெரிய வந்தது. அவர்களை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பாரதி ஜனதா கட்சி சார்பில்

# தாம்பரம் தனியார் மருத்துவமனையில் பிரதமரின் பிறந்தநாளை சேவை வாரமாக கருதி சிறப்பு இரத்ததான முகாம்

தாம்பரம், செப்.21-

செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரம் இராஜகீழ்பாக்கத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் பாரத பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாள் விழாவை சேவை வாரமாக கருதி தனியார் மருத்துவமனையில் சிறப்பு இரத்ததான முகாம் மருத்துவ பிரிவு மாநில செயலாளர் உமையாள் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. இரத்ததான முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் ரகுராமன், மாவட்ட பொதுசெயலாளர் இரத்தினம், மாவட்ட பொருளாளர் வெங்கடேசன், மாவட்ட செயலாளர் எடிசன், ஆகியோர் கலந்து கொண்டு இரத்ததான முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டனர். இரத்ததானம் அளிக்க முன் வருபவர்களிடம் உடலின் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம், உடலில் வேறு ஏதேனும் பிரச்சனைகள் உள்ளதான மருத்துவர்கள் கேட்டறிந்து அவர்களுக்கு இரத்ததானம் அளிக்க அனுமதிக்கபடுகின்றனர். இதில் மருத்துவ பிரிவு நிர்வாகிகள், செவிலியர்கள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# கொடைக்கானலில் கேரளா வர்த்தகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஒருங்கிணைப்பு குழு நடத்திய கலந்தாய்வு மற்றும் பயிற்சி முகாம் தனியார் அரங்கில் நடைபெற்றது

திண்டுக்கல், செப்.21-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கேரளா மாநிலம் வர்த்தகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஒருங்கிணைப்பு குழு நடத்திய கலந்தாய்வு மற்றும் பயிற்சி முகமானது கொடைக்கானலில் உள்ள ஒரு தனியார் அரங்கில் நடைபெற்றது. இந்த முகாமில் திருவனந்தபுரம் மண்டலத்தில் சேர்ந்த வியாபாரிகள் 300 கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இந்த முகாமில் கேரளா வியாபாரிகள் சங்க மாநில தலைவர் திரு. ராஜூ அப்சரா திருவனந்தபுரம் மாவட்ட வியாபாரிகள் சங்க தலைவர் உள்ளிட்ட பல மாவட்டங்களை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு சிறு வியாபாரிகள் வியாபாரத்தை உயர்த்துவது ஆன்லைனில் வியாபாரம் செய்யும் முறை, வாடிக்கையாளர்களிடம் எப்படி நடந்துகொள்வது குறித்து கலந்தாய்வு மற்றும் பயிற்சி நடைபெற்றது இந்த முகாமில் சிறப்பு விருந்தினராக கொடைக்கானல் முன்னாள் நகர்மன்ற தலைவர்திரு கோவிந்தன்அவர்கள் கலந்துகொண்டார் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கேரளா வர்த்தக மாநில தலைவர் ஆன்லைன் வர்த்தகத்தில் நிஷிஜி வரியை மத்திய அரசு உயர்த்தவேண்டும் வேண்டும் மேலும் ஆன்லைன் வர்த்தகத்தால் சிறு வியாபாரிகள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார், மேலும் தமிழகத்திலுள்ள வணிக சங்கங்கள் போல் கேரளாவிலும் ஒன்றி ணைந்து செயல்பட்டால் மேலும் சங்கம் மற்றும் வியாபாரிகள் வளர்ச்சிப்பாதையை செல்லும் என்று தெரிவித்தார்.






# காரமடை டாக்டர்.ஆர்.வி.கல்லூரியில் இரத்ததான முகாம்

கோவை, செப்.21-

கோவை மாவட்டம், காரமடை, டாக்டர். ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியின் முன்னாள் அறங்காவலர் ராமகிருஷ்ணன் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாட்டு நலப்பணித்திட்டம், இளைஞர் செஞ் சிலுவைச்சங்கம் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் கே.ஆர்.மருத்துவமனை சார்பாக இரத்ததான முகாம் நடைபெற்றது. இம்முகாமை கல்லூரி முதல்வர் முனைவர் சி.என்.ரூபா தொடங்கி வைத்தார். கே.ஆர். மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டாக்டர்.திலகம் ராஜேஷ் அவர்களின் தலைமையிலான மருத்துவக் குழுவினர் இணைந்து இம்முகாமை நடத்தினர். இந்த இரத்ததான சேவையில் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்று 40 யூனிட் இரத்தம் தானம் செய்தனர். இந்நிகழ்வை கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களான உமாபி ரியா மற்றும் அன்பரசன் ஒருங்கிணைத்து செயல்படுத்தினர்.



வேலூரில், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில்,

# தொழில்கள் விரிவாக்க வளர்ச்சிக்கு ஆர்வமுள்ள 32 நபர்களுக்கு, இலவச பயிற்சி மற்றும் அரசு சான்று வழங்கி ஊக்குவிப்பு

மிகவும் பயனுள்ள பயிற்சியை பெற்றோம் என பயனாளிகள் இந்த நிறுவனத்தை பாராட்டி வாழ்த்து தெரிவிப்பு

வேலூர், செப்.21-

வேலூர் மாவட்டம், வேலூர் ஏலகிரி அரங்கம், முதல் மாடி, வெல்மா கூட்டரங்கில், EDII-TN (Entrepreneurship Development and Innovation Institute – Tamil Nadu) மற்றும் மாவட்ட தொழில் மையம், வேலூர் இணைந்து AABCS திட்டத்தின் கீழ் SC & ST பயனாளிகளுக்கு 3 நாள் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி (EDP Training Programme) தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வேலூர் மாவட்ட திட்ட மேலாளர் புவனா குணசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த பயிற்சியில் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தொழில்கள் விரிவாக்க வளர்ச்சிக்கு ஆர்வமுள்ள 32 பயனாளிகள் பங்கேற்று தொழில் வாய்ப்பு அடையாளம் காணுதல், வணிக மாதிரி உருவாக்குதல், சந்தைப்படுத்தல் உத்திகள், நிதி திட்டமிடல், திட்ட அறிக்கை தயாரித்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் விரிவான பயிற்சிகளை பெற்றனர். இப்பயிற்சியின் தொடக்க நிகழ்வில் அதிகாரிகள் தொழில் முனைவோர் உருவாக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சிறப்பு பயிற்சி வழங்கினர். பெண்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புற பயனாளிகளுக்கு இந்தப் பயிற்சி தொழில் தொடங்க மற்றும் தொழில்கள் விரிவாக்க வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைந்தது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த பயிற்சியை நிறைவு செய்த அனைத்து 32 பேருக்கும் அரசின் சார்பில் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இந்தப் பயிற்சி தங்களுக்கு தொழில் முயற்சிகளை தொடங்கும் நம்பிக்கையையும், நடைமுறை அறிவையும் வழங்கியுள்ளது என்று தெரிவித்தனர்.

இந்த அனைத்து ஏற்பாடுகளையும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வேலூர் மாவட்ட திட்ட மேலாளர் புவனா குணசேகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சந்திப்பு நிலையம் முன்பாக மானாமதுரை SRMU யூனியன் சார்பில் 1968 ஆம் ஆண்டு இந்திய ரயில்வே ஊழியர்கள் மத்திய அரசுக்கு எதிராக ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் உயிர் நீத்தனர் அவர்களின் நினைவை போற்றும் வகையில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் தலைமை, கிளை தலைவர் G.சிவக்குமார் SS/TPC, முன்னிலை, கிளை செயலாளர் P. பாலமுருகன் SM/MEKM , SRMU MNM BRANCH, சிறப்புரை P.சீதாராமன் உதவி கோட்ட செயலாளர், SRMU/ மதுரை .K.விஜயேந்திரன் உதவி கோட்ட செயலாளர், SRMU/மதுரை உட்பட்ட பலர் பங்கேற்றனர்.





■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் சின்னக்கன்னனூர் கிராமத்தில் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 25 குடும்பங்கள் வசிக்கின்றனர். வேலு என்பவர் உடல் நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். உடலை எடுத்துச் செல்ல சுடுகாடு பாதை இல்லாமல் வயல்வெளியில் உடலை எடுத்து சென்றுள்ள செய்தியை அறிந்து நேற்று முன்தினம் இரவு விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாவட்டச் செயலாளர் பாலையா மானாமதுரை ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மாவட்ட செய்திதொடர்பாளர் ஆதிவளவன் ஆகியோர் இறந்தவரின் குடும்பத்தாரிடம் ஆறுதல் கூறினார். அந்த கிராம அருந்ததியர் மக்களிடம் விபரம் கேட்கும் பொழுது பல ஆண்டுகளாக வயல் வெளியில் சென்று தான் இறந்தவரின் உடலை அடக்கம் செய்து வருகிறோம் என்று கூறினார்கள். அந்த தெருவே இருளில் மூழ்கி இருந்தது தெரு விளக்கு இல்லை. தெருவில் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. குடிநீர் தட்டுப்பாடு உள்ளது. புதிய குடிநீர் மேல் தொட்டி கட்டி பல மாதங்கள் ஆகியும் இணைப்பு கொடுக்காததால் அவதிக்கு உள்ளாகின்றனர். உடனே மானாமதுரை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தொடர்பு கொண்டு தெருவிளக்கு.பேவர் பிளாக் சாலை.குடிநீர் வசதி இதை விரைவில் சரி செய்யவில்லை என்றால் விசிக சார்பாக மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகை செய்வோம் என கூறினோம். உடனே சரி செய்வதாக உறுதியளித்தார். சுடுகாட்டு மயான பாதையை மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்து விரைவில் சரிசெய்யப்படும் என்று கூறினார்.



# சோழிங்கநல்லூர் நீலாங்கரையில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

சோழிங்கநல்லூர், செப்.21-

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 15 மண்டலம், நீலாங்கரை ஆர் .கே .,கன்வென்ஷன் சென்டரில்( செப்டம்பர் : 16) “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“ தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க.,கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் மற்றும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் வழிகாட்டுதலில், 15 வது மண்டல குழு தலைவர், வி. இ. மதியழகன் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து கொடுத்தனர். தொடர்ந்து முகாமில் மக்களை தேடி மருத்துவ, பட்டா, ஜாதி சான்றிதழ், மகளிர் உரிமைத்தொகை எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்று பொதுமக்களிடம் மண்டல குழு தலைவர்., வி. இ .மதியழகன் எடுத்துரைத்தார். முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் பொதுமக்களின் குறைகளை கண்டறிந்து தீர்வு காண தான் இந்த முகாம் என்று தெரிவித்தார். தொடர்ந்து முகாமில் சில துறைகளின் மூலம் உடனுக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழை மண்டல குழு தலைவர் வழங்கினார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சோழிங்கநல்லூர் பள்ளிக்கரணையில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“ மண்டல குழு தலைவர் ஆய்வு மேற்கொண்டார்

சோழிங்கநல்லூர், செப்.21-

சென்னை தெற்கு மாவட்டம், 14 மண்டலம், சோழிங்கநல்லூர் தொகுதி, பள்ளிக்கரணை, நீலாம்பாள் மஹாலில் (செப்.19) “உங்களுடன் ஸ்டாலின்” முகாம் நடைபெற்றது. தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க., எம். எல் .ஏ. எஸ் .அரவிந்த் ரமேஷ் வழிகாட்டுதலில், முகாமில் 14 வது மண்டல குழு தலைவர் .,எஸ்.வி.ரவிச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்., பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் சில துறைகளின் மூலம் சான்றிதழை வழங்கினார். மேலும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று மக்களுக்கு தேவையான வசதியும், உதவிகளும் செய்து செய்து கொடுத்தார். தொடர்ந்து முகாமில் மக்களை தேடி மருத்துவ, பட்டா, ஜாதி சான்றிதழ், மகளிர் உரிமைத்தொகை எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்று பொதுமக்களிடம் எடுத்துரைத்தார். முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள்

பொதுமக்களின் குறைகளை கண்டறிந்து தீர்வு காண தான் இந்த முகாம் என்று தெரிவித்தார். உடன் அனைத்து துறை அரசு அலுவலர்கள் திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



குலையனேரி கிராமத்தின் குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல ராட்சத குழாய்கள் பதிக்கும் பணிகள்

# பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து மறியல் போராட்டம்: கடையநல்லூர் சட்டமன்றத்தொகுதி எம்.எல்.ஏ. கிருஷ்ணமுரளியும் கலந்து கொண்டு

தென்காசி, செப்.21-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகேயுள்ள கள்ளம்புளி என்ற கிராமத்தில் கள்ளம்புளி குளம் அமைந்துள்ளது.

இங்கே அரசு சார்பில் கள்ளம்புளி குளத்தில் இருந்து அருகே உள்ள குலையனேரி என்ற கிராமத்தின் குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல ராட்சத குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் குளத்தின் நடுவே குழாய்கள் பதித்தால் கள்ளம்புளி கிராமத்தின் முக்கிய நீராதாரம் பாதிக்கப்படும் என்றும் இந்த கள்ளம்புளிகுளத்தை நம்பி சுமார் 48 ஏக்கர் நஞ்சை 500 ஏக்கர் புஞ்சை பலன் பெற்று வருவதாகவும் அருகிலுள்ள கிராமத்திற்கு குழாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்ல கூடாது என்றும் அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து சில தினங்களுக்கு முன்னர் பஞ்சாயத்து தலைவர் ஜெயக்குமார் தலைமையில் குளத்தில் குடியேறி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று ராட்சத இயந்திரம் மூலம் தோண்டும் பணி ஆரம்பிக்க இருந்த சூழலில் கற்களால் அடித்து அந்த வாகனம் திருப்பி அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் உடனடியாக சாலைக்கு சென்று மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மறியல் போராட்டத்தில் கடையநல்லூர் சட்டமன்றத்தொகுதி MLA திரு கிருஷ்ணமுரளியும் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன் தலைமையில் கோட்டாட்சியர் வைஷ்ணவி பால், கடையநல்லூர் தாசில்தார் பாலசுப்பிரமணியன் பொதுப்பணித்துறை உதயகுமார், டிஎஸ்பி மீனாட்சிநாதன் , பயிற்சி டிஎஸ்பி ப்ரீத்தி கடையநல்லூர் இன்ஸ்பெக்டர் ஆடிவேல் ஆகியோர் முன்னிலையில் தற்போது போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

# அணைக்கட்டு தாலுகா பொய்கை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்

மாவட்ட ஆட்சியர் மற்றும் அணை. எம்.எல்.ஏ. நந்தகுமார் பங்கேற்று சிறப்பு பார்வை

வேலூர், செப்.21-



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பொய்கை ஊராட்சி, பொய்கை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், ஆகியோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமை பார்வையிட்டு, தொடங்கி வைத்து, முகாமில் மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது அணைக்கட்டு ஒன்றியக்குழு துணை தலைவர் சித்ரா குமராபாண்டியன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பரணிதரன், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.பியூலா ஆக்னஸ், வட்டாட்சியர் சுகுமார், அணைக்கட்டு திமுக கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் கே.எஸ்.பழனிவேல், மாவட்ட கவுன்சிலர் ஆர்.ராகப்பிரியா சீனிவாசன் பி.எஸ்.சி., பி.எட்., வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாரி, ஹேமலதா, பொய்கை ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோவன், பாமக அமைப்பு செயலாளர் அக்னி வேல்முருகன், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு இந்த மருத்துவ முகாமை சிறப்பித்தனர். எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் துறை சார்பில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் சிறப்பான முறையில் மதிய உணவு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# பரிதவிக்கும் பொதுமக்கள் கண்டும் காணாத இருக்கும் வேலூர் மாநகராட்சி

வேலூர், செப்.21-

வேலூர் மாநகராட்சி நாலாவது மண்டலம் 33 வது வார்டு பகுதியில் உள்ள வசந்தபுரம் பூங்காவனத்தம்மன் கோவில் பர்மா காலனி நவநீதி அம்மன் கோவில் தெரு பகுதியில் பாதாள சாக்கடை திட்டப் பணிக்காக ஒரு வருட காலத்துக்கு மேலாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இந்தப் பணி ஏனோ தானோ வென்று ஆமை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டுள்ளது இப்பணிக்காக சாலை முழுவதும் தோண்டப்பட்டு மூடப்படுவது தோண்டப்படுவது வாடிக்கையாகவே இருந்து வருகிறது

தற்போது மழைக்காலங்களில் பகுதி முழுவதும் சேரும் சகதியும் உள்ளது

இதனால் பகுதியில் உள்ள பொதுமக்கள் குழந்தைகள் வயதான பள்ளி கல்லூரி மாணவர்கள் விழுவதும் எழுவதும் கை கால்கள் உடைவதும் வாடிக்கையாகவே உள்ளது இதனால் இப்பகுதி வாசிகள் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம் என வேதனையுடன் தெரிவிக்கின்றனர் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு மாநகராட்சி நிர்வாகம் தற்காலிகமாகவோ நிரந்தரவுமாகவோ இப்பகுதியை சரி செய்து தர வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர் தங்கள் கோரிக்கைகளை தெரிவித்து வருகின்றனர்.

# திருவஞ்சேரி 1கோடியே 23 லட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணிகளை துவக்க விழா

திருவஞ்சேரி, செப்.21-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடைபெற்ற விழாவில் 243 பள்ளிகளில் ரூ.277 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள , வகுப்பறைக் கட்டிடங்கள், ஆய்வகக் கட்டிடங்கள், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் திருவஞ்சேரி ஊராட்சியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் ரூ.1கோடியே 23 லட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனிசுரேஷ்பாபு, திருவஞ்சேரி ஊராட்சி மன்ற துணை தலைவர் ருக்மணி சக்தி, பள்ளி தலைமை ஆசிரியர் ராமலதா, புனித தோமையார் மலை ஒன்றிய அவைத் தலைவர் சக்தி, கிளைச் செயலாளர்கள் சுரேஷ்பாபு கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள், மற்றும் பள்ளி மாணவ மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161